**அம்பகமுவ பிரதேச சபை - 2024**

**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பகமுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 .நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 581,330 ஆன 07 வைப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா. 16,969,365 04 நிலையான சொத்துக்கள் மீதிகள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரீட்சிக்க முடியாமல் போனது. | பதிவேடுகளை முறையாக பராமரித்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலையான சொத்துக்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு அட்டவணைகள், மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டம்** | | | |
| 2021 ஜூலை 08 திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை VI பகுதி 83.1 ஆம் பந்தி | 2018 – 2022 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட 12 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு அறிவிக்கப பட்டுள்ளதாக. | குடியிருப்பிற்காக பயன்படுத்தியுள்ள கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்களை வழங்க வேண்டும். |
| **(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| 149 ஆம் பிரிவு | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 02 ஹொட்டல்களில் இருந்து 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வருடாந்த வருமானத்தில் 01 சதவீதத் திற்கு குறையாத அனுமதிப்பத்திரக் கட்டணம் பதிவு செய்யப்பட்ட ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக. | நிலுவை வருமானத்துடன் வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 571(3) | 2019 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான காலப் | வைப்புக்களை தீர்வு செய்ய | காலாவதியான வைப்புக்கள் தீர்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியில் காலாவதியான ரூபா. 4,643,504 ஆன 77 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | நடவடிக்கை எடுப்பதாக. | செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | **2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி** | கடை வாடகை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 05 கடைகள் 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டு வந்தது. | மதிப்பீட்டை செய்து தருமாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக. | மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்டு உடன்படிக்கையை திருத்தம் செய்த வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,665,343 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,940,598 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 13,833,000 | 10,805,135 | 9,954,841 | 1,884,639 | 5,589,000 | 3,797,102 | 3,790,773 | 1,034,345 |
| (ii). வாடகை | 4,050,000 | 3,769,219 | 3,900,516 | 1,690,661 | 10,373,100 | 3,164,529 | 3,452,798 | 1,821,958 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 6,360,500 | 7,758,394 | 7,016,055 | 1,291,429 | 1,551,000 | 4,367,618 | 4,000,948 | 549,090 |
| (iv). ஏனைய வருமானம் | 20,290,000 | 14,782,127 | 48,823,983 | 1,282,052 | 132,300,620 | 23,182,500 | 55,119,761 | 35,323,908 |
| **மொத்தம்** | 44,533,500 | 37,114,875 | 69,695,395 | 6,148,781 | 149,813,720 | 34,511,749 | 66,364,280 | 38,729,301 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,728.072 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 74 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 986,744 ஆன வீதவரி மீதியொன்று 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 755,314 ஆன நிலுவை கடை வாடகை மீதியில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தொடர்ந்தும் நிலுவை ரூபா 429,417 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 05 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட கடை வாடகை 15 உரிமையாளர்களிடமிருந்து ரூபா 208,796 தொகையும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 02 கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 243,500 தொகையும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,291,000 ஆன விளம்பர பதாதை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கோ அல்லது வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,282,052 ஆன நிலுவை நீர்க் கட்டண மீதியொன்று காணப்பட்டதுடன் அந்நிலுவையில் ரூபா 2,000 இற்கு மேற்பட்ட 215 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,083,882 ஆன மீதியொன்று இருந்தது. | அறவிடுவதற்கோ அல்லது வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 1,457,235 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 26,688,430 ஆன தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அட்டவணைகளை சமர்ப்பித்து நிலுவை கட்டணங்களை அறவிடுவதாக. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) பொது மக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 04 நீர் மூலாதாரங்களின் நீர் மாதிரி பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் குடிநீமுர் தொடர்பான ஏற்றுக் கொள்ளப்பட்ட தரங்களுக்கு (SLS 614) இனை விட குறைந்த மட்டத்தில் நீரின் தரம் காணப்பட்டமையால் தரம் குறைந்த நீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற் கொள்ளப்படுவதாக. | சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை அமைப்பதற்காக பொருத்தமான காணியொன்று இனங்காணாமை காரணமாக நாளாந்தம் சேகரிக்கப்படும் 900 கிலோ கிராம் அளவிலான உக்கும் கழிவுகள் மஸ்கெலியா பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் ரிகாடன் கழிவுப்பொருள் தொகுதிக்கு வெளியேற்றப்பட்டு வந்தது. இதன் காரணமாக கழிவுப்பொருள் வெளியேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணியொன்றை இனங்காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | திண்மக் கழிவுப் பொருடகளை முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 2011 – 2012 காலப்பகுதியில் கடைத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்டு அத்திவாரம் மாத்திரம் இட்டு நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக 12 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படா மையால் செலவிடப்பட்ட பணம் விளைவற்றதாக இருந்தது. | நிர்மாண நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்மிடப்பட்டுள்ளதாக. | செயற்திட்டங்களை உரிய காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்து பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்குகளின் மொத்தம் ரூபா 15,559,343 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 1,150,053 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 5,816,754 ஆகவும் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை ஒப்பந்தத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் இரு தரப்பினராலும் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஆறு மாதங்களுக்கான வாடகை பிணையாக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 13 கடைகளுக்கு மொத்தம் ரூபா 341,550 ஆன பாதுகாப்பு பிணை வைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உடன்படிக்கைப் பிரகாரம் பாதுகாப்பு பிணை வைப்பு அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் கடை வாடகை ஒப்பந்தங்களில் 5.2 பிரிவின் பிரகாரம் நோட்டன்பிரிஜ் பழைய பொது வியாபாரச் சந்தையில் சபைக்குச் சொந்தமான 07 கடைகளின் கடை வாடகை 2024 ஒக்தோபர் 02 ஆந் திகதி முதல் புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய உடன்படிக்கையை விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2008 இன் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றம் தரம்) கட்டளைகளின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 08 நிர்மாண வேலைகள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றை வழங்கவதற்கு முன்னர் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் குழு பரிந்துரை பெற்றுக் கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கோ அல்லது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்**<br>ரூபா 7,571,997 ஆன 04 இயந்திரங்கள் மற்றும் பொறிகள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 05 இற்கு மேற்பட்ட காலமாக விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கையேற்கப்படாத சொத்துக்கள்**<br>சபை பயன்படுத்தும் 12 மயானங்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 02 வருமான பரிசோதகர் பதவிகள், நூலகர், தொழில்நுட்ப உதவியாளர், சுகாதார மேற்பார்வையாளர் பாலர் பாடசாலை காப்பாளர், பார உபகரண செயற்பாட்டாளர், ஆயர்வேத மருந்தாளர், சுடலைச்சாலை செயற்பாட்டு உதவியாளர் போன்ற 14 பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது பிரதேச சபையின் வருமானங்களை சேகரித்தல் மற்றும் சமூக நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தடையொன்றாக காணப்பட்டது. | வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக நிரப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தி சமூகமட்ட சேவைகளை தடையின்றி வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற, மரணித்த, ஓய்வு பெற்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 316,800 ஆன நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |